உலகம் – அனைவருக்கும்… – The life of Mine

thelifeofmine3.wordpress.com/2024/09/24/%E0%AE%89%E0%AE%B2%E0%AE%95%E0%AE%AE%E0%AF%8D-%E0%AE%85%E0%AE%A9%E0%AF%88%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%81%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AF%81%E0%AE%AE%E0%AF%8D/

September 24, 2024

நல்ல சாவு
இதோ அதோ என்று இழுத்துக் கொண்டிராமல் பக்கவாதம் வந்து படுக்கையில் கழியாமல் எல்லோருடனும் பேசிச் சிரித்து தூங்கிய இரவில் செத்துப்போனார் தாத்தா.
ஒப்பாரியினூடே மூக்கைச் சிந்தி சுவரில் தடவி பாட்டி சொன்னாள் நல்ல சாவு!
– Unknown

சாபம்
“செத்துப் போ” என யாரையும் சபிக்காதே வேண்டுமானால் “வாழ்ந்து போ” என்று சபித்துவிடு
நண்பா புரிந்துக் கொ(ல்)ள் சாவதைக் காட்டிலும் இங்கு வாழ்வதுதான் பெருஞ்சாபம்.
ஒன்றுக்காக ஏங்கத் தொடங்கும் பொழுது, ஒன்றை இழக்கும் தைரியம் வருகிறது.
– BETTERMAXLIGHT

விதிக்கு தெரியாது…
அரக்கனை மணந்த மண்டோதரியும் அழுதாள்…அவதார புருஷனை மணந்த சீதையும் அழுதாள்…
விதியின் விளையாட்டு இப்படித்தான் இருக்கும்…
விதிக்கு தெரியாது விதிவிலக்கு: விதி வலிது…
– KAATHAL KAVITHAI

தம்பி:
நான் மலர்ந்த தொப்புள் கொடியின் இன்னொரு பூ என் உதிரத்தின் பங்காளி..
வேற்று ஒருவன் ஆனாலும் என் மாற்று ஒருவன்..
நான் உண்ட மிச்ச பாலின் ருசி அறிந்தவன் அதனால் என் பசி அறிந்தவன்..
என் நாணயத்தின் இன்னொரு பக்கம் தூக்கத்தில் என்ன தாங்கும் தூண் என் சக ஊன்…
– vith_aarth_writes

வாழ்க்க எப்படி இருக்கு” என்று கேட்டாள். “அது கிடக்கு கழுத” என்றேன். பிறகு அவளும் நானும் வாழ்க்கைக்கு வெளியே பல மணிநேரம் பேசிக்கொண்டிருந்தோம். இதையே பார்த்துக்கொண்டிருந்த நண்பனொருவன் “வாழ்க்கடா” என்று காதில் கிசுகிசுத்து விட்டுப் போனான்.
அந்தத் தருணத்து மரத்தடியில் தோன்றிய ஞானம் என்னவெனில், வாழ்க்கைடா என்று வாழ்த்துப் பெறுவதற்கு ஒரே வழி வாழ்க்கைக்கு வெளியே பேசுவது.
– இசை

பெயரைக் கேட்ட மாத்திரத்தில் நீங்கள் கிறிஸ்தவரா? எனக் கேட்பவர்கள் நிறைய பேர்
கம்யூனிஸ்ட்டா? எனக் கேட்பவர்கள் கணிசமான பேர்.
பொங்கல் கொண்டாடுறீங்களே நீங்களும் இந்துவா? இப்படியும் சிலர் கேட்கிறார்கள்.
என்னை அடையாளம் காண நினைப்பவர்களிடமிருந்து அவரவர்களையும் அடையாளம் காண்கிறேன் நான்.
– கோவி.லெனின்

இப்படியெல்லாம்
இப்படியெல்லாம் செய்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் இப்படியெல்லாம் செய்யாமல் இருந்தால் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள்
இப்படியெல்லாம் நடக்க வேண்டாமென்று மற்றவர்கள் சொல்வார்கள் இப்படியெல்லாம் நடந்துவிட்டதேயென்று மற்றவர்கள் சொல்வார்கள்
நம்மைப்போலவே மற்றவர்களும் மற்றவர்களைப் பற்றியே
– யுகபாரதி

யாரும் இல்லாமல் போனால்
‘உனக்கு நான் இருக்கிறேன்’
என்பது எவ்வளவு அர்த்தமற்ற வார்த்தை… இல்லாமல் போன எல்லோருமே அதை ஒரு காலத்தில் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள்
எனினும் அது தேவையாகத்தான் இருக்கிறது நான் இல்லாமல் போவதை சற்றே ஒத்திவைக்க
வார்த்தையாகக்கூட யாரும் இல்லாமல் போனால் அப்புறம் இந்தப் பாழ்வெளியை எப்படிக் கடப்பது?
– மனுஷ்ய புத்திரன்

அகதிக்கும்..! மனைவிக்கும்..! அப்படி ஒன்றும் வித்தியாசம் இல்லை..! அவர்கள் நாடு கடத்தப்பட்டவர்கள்..! இவர்கள் வீடு கடத்தப்பட்டவர்கள்..! அவ்வளவுதான்..!
– Unknown

மனது சோர்வுற்றிருக்கையில் செய்யக் கூடாததைச் செய்கிறோம்
பிடித்தமானவர்களுடன் பிடிக்காதவற்றை மணிக்கணக்காகப் பேசுகிறோம்
விரும்பிய காரியத்தின் மீது வெறுப்பு கொள்கிறோம்
சிந்தனைகளையும் கேள்விகளையும் வீரியத்தோடு எழுப்பி அப்போதே அதிலிருந்து வெளியேறத் துடிக்கிறோம்
அழுவதற்காகத் தனிமைப்பட்டு ஆறுதல் சொல்பவர்களைத் திட்டுகிறோம்
மீண்டும் மீண்டும் மனது ஏன் சோர்வுற்றதென யோசித்து மீள இயலாச் சோர்வில் விழுந்து கிடக்கிறோம்.
– யுகபாரதி

உன் கவிதையை நீ எழுது
உன் காதல்கள் பற்றி, கோபங்கள் பற்றி எழுது. உன் ரகசிய ஆசைகள் பற்றி, நீ அர்ப்பணித்துக்கொள்ள விரும்பும் புரட்சி பற்றி எழுது. உன்னை ஏமாற்றும் போலிப் புரட்சியாளர்கள் பற்றி எழுது, சொல்லும் செயலும் முயங்கி நிற்கும் அழகு பற்றி எழுது, நீ போடும் இரட்டை வேடம் பற்றி எழுது, எல்லோரிடமும் காட்ட விரும்பும் அன்பைப் பற்றி எழுது, எவரிடமும் அதைக் காட்ட முடியாமலிருக்கும் தத்தளிப்பைப் பற்றி எழுது… எழுது உன் கவிதையை நீ எழுது அதற்கு உனக்கு வக்கில்லை என்றால் ஒன்று செய் உன் கவிதையை நான் ஏன் எழுதவில்லை என்று என்னைக் கேட்காமலேனும் இரு.
– சுந்தர ராமசாமி